**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 238/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் வெள்ளிக் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.08.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ரவீந்திரன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு கூடுதல் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1) 14.10.1954 என் தாயார் பெயரில் உள்ள கிரய சாசனம் பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆகவும்

2) வில்லங்கச்சான்று கணிணி நகல் வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**